# Indian Economy Model Test Questions 7 in Tamil With Answer

1. இந்திய வங்கிகளில் எந்த ஒரு வங்கி முதன் முதலில் உழுவோர் கடந்திட்ட அட்டை முறையை அறிமுகப்படுத்தியது?

அ. ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா ஆ. யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

**இ. பேங்க் ஆஃப் இந்தியா** ஈ. ஃபெடரல் பேங்க்

2. 1969 ஆம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை

அ. 16 **ஆ. 14** இ. 13 ஈ. 10

3. பத்து ரூபாய் பணத்தாள்களில் காணப்படுவது யாருடைய கையொப்பம்?

அ. நிதி அமைச்சர் **ஆ. ரிசர்வ் வங்கி கவர்னர்**

இ. நிதி அமைச்சக செயலர் ஈ. இவர்களில் எவருமிலர்

4. சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய/பிரதான நோக்கம்

அ. கூட்டுறவு சங்கங்களை அமைத்தல்

ஆ. குடிசைத் தொழில்களை நிறுவுதல்

இ. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை அமைத்தல்

**ஈ. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரித்தல்**

5. கிராமியத் தொழிகளைத் தொடங்குவதால் தோன்றும் முக்கிய நன்மை

அ, நவீன தொழில் நுண்ணறிவைப் பயன்படுத்துதல்

**ஆ. சுயவேலை வாய்ப்பும் குடும்ப உழைப்பைப் பயன்படுத்துவதும்**

இ. தேர்ச்சி வாய்ந்த தொழிலாளர்களை பயன்படுத்துதல்

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

6. இந்தியா முதன் முதல் ரூபாய் மதிப்பைக் குறைத்த வருடம்

அ. 1946 ஆ. 1956 **இ. 1966** ஈ. 1976

*முதல் முறை 1949, 2வது முறை 1966, 3வது முறை 1991

7. இந்திய ஏற்றுமதியில் பெரும்பங்கு வகிக்கும் நாடு எது?

**அ. யு.எஸ்.ஏ** ஆ. யு.கே. இ. கனடா ஈ. ஜப்பான்

8. இந்தியாவில் உச்சபட்ச எண்ணிக்கையில் மக்கள் பணிபுரிவது?

**அ. முதன்மைத் துறையில்** ஆ. இரண்டாம் நிலைத்துறையில்

இ. மூன்றாம் நிலை/பணித்துறையில் ஈ. இவற்றுள் எதுவுமில்லை

9. ஓம்கார் கோஸ்வாமி குழு இப்பிரச்சனையின் ஆய்வுடன் தொடர்புடையது?

**அ. தொழில் நலிவு** ஆ. தொழில் சச்சரவு

இ. தொழில் நிதி ஈ. தொழில் காப்பீடு

10. கிரைகுனாஸ் வெளிக் கொணர்ந்த கோட்பாடு

அ. கட்டுப்பாட்டு வீச்செல்லை **ஆ. கட்டுப்படுத்தலும் வழிகாட்டலும்**

இ. துறைகளமைத்தல் ஈ. அதிகாரங்களைப் பரவலாக்குதல்

11. தனிநபர் வருமானம் என்பது

அ. தேசிய வருவாய் x மக்கள் தொகை

ஆ. $\frac{\text{மக்கள் தொகை}}{\text{தேசிய வருவாய்}}$

**இ.** $\frac{\textbf{தேசிய வருவாய்}}{\textbf{மக்கள் தொகை}}$

ஈ. இவை அனைத்தும்

12. கோப்பிடல் என்பது கீழ்க்கண்டதுடன் தொடர்புடைய அம்சம்

**அ. ஆவணங்களை பாதுகாத்தல்** ஆ. கணக்குப் பதிவியல்

இ. வீட்டுப் பராமரிப்பு ஈ. நேரப் பராமரிப்பு

13. இலாப நட்டமில்லாத புள்ளி என்பது

அ. இறுதிநிலை வருவாயும் இடுநிலை அடக்கமும் சமமாக உள்ளது

**ஆ. மொத்த வருவாயும் மொத்த அடக்கமும் சமமாக உள்ளது**

இ. இறுதிநிலை வருவாயும் மொத்த அடக்கமும் சமமாக உள்ளது

ஈ. மொத்த வருவாய் மொத்த அடக்கத்தை விட அதிகமாக உள்ளது

14. வளர்ச்சியடைந்த நாடுகளின் தலா வருமானம் இந்திய தலாவருமானத்தை விட எத்தனை மடங்கு அதிகம்?

அ. 5 மடங்கு **ஆ. 15 மடங்கு**

இ. 20 மடங்கு ஈ. 50 மடங்கு

15. பின்வருவனவற்றுள் நேர்முக வரியல்லாதது

அ. வருமான வரி ஆ. செல்வ வரி

**இ. விற்பனை வரி** ஈ. மரண வரி

16. தன்னலமே பொது நலத்தை மேம்படுத்துகிறது இது யாருடைய கூற்று?

அ. காரல் மார்க்ஸ் ஆ. பெரியார்

**இ. ஆடம் ஸ்மித்** ஈ. அம்பேத்கார்

17. மக்கட் தொகைக் கோட்பாட்டை அளித்தவர்

அ. ஆடம் ஸ்மித் **ஆ. மால்தஸ்**

இ. ரிக்கார்டோ ஈ. கீன்ஸ்

18. 1956 ஆம் ஆண்டு தொழிற் கொள்கை மசோதா இத்துறை விரிவாக்கத்தை வலியுறுத்தியது?

அ. தனியார் துறை **ஆ. பொதுத் துறை**

இ. இணைத்துறை ஈ. இவை அனைத்தும்

19. 1991 ஆம் ஆண்டு புதிய பொருளாதாரக் கொள்கை இத்துறையின் விரிவாக்கத்தை வலியுறுத்தியது

**அ. தனியார் துறை** ஆ. பொதுத்துறை

இ. கூட்டுறவுத் துறை ஈ. இணைத்துறை

20. குறைந்தபட்ச கூலிச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ. 1947 **ஆ. 1948** இ. 1949 ஈ. 1950

21. தொழில் நலிவிற்கான மிக முக்கிய காரணம்

அ. திட்டமிடுதலில் குறைபாடுகள் **ஆ. நிர்வாக குறைபாடுகள்**

இ. திறமையற்ற நிதி நிர்வாகம் ஈ. திறமை குறைந்த உழைப்பாளிகள்

22. விவசாயிகளோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ளது எது?

அ. மாநில கூட்டுறவு வங்கிகள் ஆ. மத்திய கூட்டுறவு வங்கிகள்

**இ. முதன்மை விவசாய கடன் சங்கங்கள்** ஈ. (அ) மற்றும் (ஆ) இரண்டும்

23. கீழ்க்கண்டவற்றுள் எது இந்தியப் பொருளாதாரத் திட்டமிடுதலின் நோக்கம் அல்ல?

**அ. மக்கள் தொகை வளர்ச்சி** ஆ. தொழில் வளர்ச்சி

இ. சுயசார்பு ஈ. வேலை வாய்ப்பு பெருக்கம்

24. பணவீக்க காலத்தில் பாதிக்கப்படுவது

அ. கடன் வாங்கியவர்கள் **ஆ. கடன் கொடுத்தவர்கள்**

இ. (அ) மற்றும் (ஆ) இருவருமே ஈ. இவர்களுள் எவருமிலர்

25. நிலவள வங்கிகள் விவசாயிகள் எந்த வகையான தேவைகளுக்கு கடனளிக்கின்றன?

அ. குறுகிய கால தேவைகள் ஆ. மத்திய கால தேவைகள்

**இ. நீண்டகால தேவைகள்** ஈ. இவை எதுவுமில்லை

26. ஒரு பொருளைப் பற்றி விளம்பரம் செய்வதன் முக்கிய நோக்கம் என்ன?

**அ. பொருளின் விற்பனையை அதிகரிக்க**

ஆ. பொருளைப் பற்றிய நல்லெண்ணம் உருவாக்க

இ. பொருளின் மீதுள்ள பிடிப்பை நிலையாக வைத்திருக்க

ஈ. விற்பனை அதிகாரிகளுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்க

27. வேலையின்மைக்கு மிக முக்கிய காரணம்

அ. மக்கள் தொகை வளர்ச்சி

ஆ. கிராமப் புறங்களில் பிறப்பு விகிதம் அதிகம்

**இ. மனித வள திட்டமிடுதலில் உள்ள குறைகள்**

ஈ. இவற்றில் எதுவுமில்லை

28. இந்தியாவில் உள்நாட்டு வங்கியாளர்களின் பிரபல்யம் குறைந்து போனதன் மிக முக்கியக் காரணம்

அ. அவர்கள் வங்கி தொழிலை விடுத்து வேறு தொழிலை செய்வது

ஆ. மக்களிடையே ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வு

**இ. அவர்கள் அதிக வட்டி வசூலித்தது**

ஈ. வணிக வங்கிகளால் ஏற்பட்ட போட்டி

29. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க.

மறைமுக வரிகள்

1. சுங்கவரி 2. கலால் வரி

3. விற்பனைவரி 4. வருமான வரி

இவற்றுள்

அ. 1, 2, 3 மற்றும் 4 சரி ஆ. 2, 3 மற்றும் 4 சரி

**இ. 1, 2 மற்றும் 3 சரி** ஈ. 1, 2 மற்றும் 4 சரி

30. இந்தியாவின் தேசிய வருமானத்தின் குறைந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணம்

அ. மக்கள் தொகை பெருக்கம்

**ஆ. விவசாயத்தை அதிகமாக சார்ந்திருப்பது**

இ. தொழிலாளர்களின் குறைந்த உற்பத்தி திறன்

ஈ. வேலையில்லாத் திண்டாட்டம்

31. மறைமுக வேலையின்மைக்கு காரணம்

அ. ஒருபுறம் மக்கள் தொகை வேகமாக வளருவதும் மறுபுறம் வேளாண்மையல்லாத பிற துறைகளில் வேலை

ஆ. வேளாண்மை உற்பத்தி குறைதல்

இ. மக்களின் கல்வியறிவின்மை

**ஈ. இவைகளில் யாவுமில்லை**

32. ஐ.சி.ஐ.சி.ஐ என்பது

**அ. நிதி நிறுவனம்** ஆ. கெமிக்கல் தொழில்

இ. பருத்தி தொழில் ஈ. தொழில், வர்த்தக சபை

33. பி.எஸ். மினாஸின் ஆய்வு இதைப் பற்றியது

அ. கிராம வளர்ச்சி ஆ. கல்வி

இ. வேலைவாய்ப்பு **ஈ. கல்வி**

34. எஸ்.எஃப். டி.ஏ. என்பது

அ. மீன் வளர்ச்சி **ஆ. விவசாயிகள் வளர்ச்சி**

இ. நுண்கலை வளர்ச்சி ஈ. நிதி வளர்ச்சி

35. கீழ்க்கண்ட கூற்றுகள ஆய்க.

1. MNC என்பது ஒரு பன்னாட்டு வங்கி
2. MNC ஒரு பன்னாட்டு உதவி அமைப்பு
3. MNC ஒரு பன்னாட்டு விமான சேவை
4. MNC ஒரு பன்னாட்டு வியாபார நிறுவனம்

இவற்றில்

அ. 1 மட்டும் சரி ஆ. 1, 2 மற்றும் 3 சரி

**இ. 4 மட்டும் சரி** ஈ. அனைத்தும் சரி

36. பட்டியல் 1 ஐ, பட்டியல் 2 உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. டான்செம் | 1. 1961 |
| ஆ. சிட்கோ | 2. 1970 |
| இ. டாமின் | 3. 1976 |
| ஈ. டிட்கோ | 4. 1965 |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 3 | 1 | 4 |
| **ஆ.** | **1** | **2** | **3** | **4** |
| இ. | 4 | 3 | 2 | 1 |
| ஈ. | 1 | 4 | 2 | 3 |

37. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி.

கூற்று (A): இந்தியாவின் விவசாய உற்பத்தி திறன் மிகவும் குறைவு.

காரணம் (R): கிராமபுற விவசாயிகள் பிறப்பதும், இறப்பதும் கடனிலே

கீழ்க்கண்ட குறியீடுகளுக்கு ஏற்ப உங்களது விடையை தேர்ந்தெடுக்க.

**அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல

இ. (A) சரி; ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு; ஆனால் (R) சரி

38. பட்டியல் 1 ஐ, பட்டியல் 2 உடன் பொருத்து, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. எஸ்.எ.ஐ.எஸ் | 1. 1969 ஆம் வருடம் தேசிய மயமாக்கப்பட்டது |
| ஆ. விவசாயம் | 2. முடக்கப்பட்ட துணி தொழிற்சாலை |
| இ. என்.டி.சி | 3. டாக்டர் எம்.எஸ். சுவாமி நாதன் |
| ஈ. பரோடா வங்கி | 4. இரும்பு உலோக தொழிற்சாலை |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 2 | 1 | 4 |
| **ஆ.** | **4** | **3** | **2** | **1** |
| இ. | 1 | 2 | 4 | 3 |
| ஈ. | 2 | 1 | 3 | 4 |

39. இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரக் கணக்கு பாதகமாகவே இருந்து வருவதற்கான காரணம்

அ. நலிவான வெளிநாட்டுக் கொள்கை

**ஆ. ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாக இருப்பது**

இ. குறைவான ஏற்றுமதி வசதிகள்

ஈ. தரம் குறைந்த ஏற்றுமதிப் பொருட்கள்

40. நிதிக்குழு செயல்படுவதன் நோக்கம்

அ. மத்திய அரசின் வருவாய் மூலங்களைப் பெருக்குவது

ஆ, பொதுச் செலவை கட்டுப்படுத்துவதற்கான நெறிமுறைகளை ஆராய்வது

இ. மத்திய-மாநில நிதி உறவு

**ஈ. மேற்கண்ட எல்லாம் சரி**

41. தனியார் மயமாக்கலை ஊக்குவிக்க சமீபத்தில் மத்திய அரசால் முடிவு செய்யப்பட்ட துறை

அ. தகவல் தொடர்பு ஆ. மின்சாரம்

**இ. காப்பீடு** ஈ. இவை அனைத்தும்

42. உலக மயமாக்குதல் என்பது

அ. உலகம் முழுவதும் கூட்டுறவை வளர்த்தல்

**ஆ. அங்காடியின் அளவினை ஒரு நாட்டின் எல்லைக்கப்பாலும் விரிவடையச் செய்வது**

இ. உலக நாடுகளின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல்

ஈ. இவற்றில் எதுவும் இல்லை

43. கீழ்க்கண்டவற்றில் எதில் ஏற்படும் மாற்றம் பொருளாதார வளர்ச்சியை வளர்ச்சியை அளக்க உதவும்?

அ. தலைவிகித உண்மை வருமானம்

**ஆ. உழைப்பாளிகளின் சராசரி வாழ்க்கைச் செலவு**

இ. மொத்த தேசிய வருமானம்

ஈ. இவை எதுவுமில்லை

44. MRTP சட்டம் செல்லுபடியாவது

அ. தனியார் துறையில் மட்டும்

ஆ. பொதுத் துறையில் மட்டும்

**இ. பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டும்**

ஈ. தனியார் மற்றும் பொது துறைகளில்

45. இந்தியாவில் மிக அதிக வருவாயைத் தரும் வரி

அ. நேர்முக வரிகள் ஆ. மறைமுக வரிகள்

இ. விற்பனை வரி **ஈ. கலால் வரி**

46. பணவீக்கத்தை குறைக்க மேற்கொள்ள வேண்டிய தற்காலிக நடவடிக்கை

அ. வரிகளை குறைக்க வேண்டும்

ஆ. தொழிலாளர்களின் கூலியை உயர்த்த வேண்டும்

**இ. பண அளிப்பை குறைக்க வேண்டும்**

ஈ. பண அளிப்பை அதிகரிக்க வேண்டும்

47. பணக்கொள்கையின் நோக்கம்

அ. பணப்புழக்கத்தை அதிகரித்தல்

ஆ. வணிக வங்கிகளில் கடன் பெருக்கத்தை உயர்த்துதல்

**இ. விலைகளை நிலைப்படுத்துதல்**

ஈ. தலைவிகித வருமானத்தை உயர்த்துதல்

48. மக்கள் தொகை பெருக்கத்தைப் பற்றி எச்சரிக்கை செய்த பொருளியல் அறிஞர்

அ. ஆடம் ஸ்மித் **ஆ. மால்தஸ்**

இ. காரல் மார்க்ஸ் ஈ. ஜே.எம்.கீன்ஸ்

49. கீழ்க்காண்பவற்றில் எந்த மாநிலம் வாணிபம் மற்றும் தொழில் துறையில் முதலிடம் வகிக்கிறது?

**அ. மஹாராஷ்டிரம்** ஆ. தமிழ்நாடு

இ. உத்திரப் பிரதேசம் ஈ. மேற்கு வங்காளம்

50. பின்வரும் கூற்றுகளை ஆய்க.

1. இரயில் போக்குவரத்து

2. விவசாயம்

3. சாலை போக்குவரத்து

4. ஏற்றுமதி வணிகம்

இவற்றில்,

**அ. 2, 1, 3, 4** ஆ, 1, 2, 4, 3 இ. 2, 3, 4, 1 ஈ. 4, 1, 3, 2

51. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:

கூற்று(A): மறைமுக வேலையின்மை பெரும்பாலும் விவசாயத்துறையில் காணப்படுகிறது.

காரணம்( R): கிராமப்புற மக்கள் மேலும் மேலும் கல்வியறிவு பெற்று வருகிறார்கள்

கீழ்க்கண்ட குறியீடுகளுக்கு ஏற்ப உங்களது விடையை தேர்ந்தெடுக்க.

அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

**ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல**

இ. (A) சரி; ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு; ஆனால் (R) சரி

52. விரிவுபடுத்துக: எம்.ஆர்.ட்டிஎஸ்.

அ. மாஸ்ரோடு டிரான்ஸ்போர்ட் சிஸ்டம் ஆ. மெட்ராஸ் ரோடு டிரான்ஸ் போர்ட் சிஸ்டம்

**இ. மாஸ் ரேபிட் டிரான்ஸ் போர்ட் சிஸ்டம்** ஈ. மெட்ராஸ் ரவுண்ட் டிரிப் சிஸ்டம்

53. IRBI குறிப்பது

அ. இந்திய கிராமப்புற தொழில் வங்கி

ஆ. இந்திய முதலீட்டு கிராமப்புற வங்கி

**இ. இந்திய தொழில் துறை புதுப்பிக்கும் வங்கி**

ஈ. இவற்றில் எதுவுமில்லை

54. பின்வரும் கூற்றுகளை ஆய்வு செய்க,

1. பசுமை புரட்சி என்பது பச்சை மரங்களை மேன்மேலும் வளர்ப்பது

2. தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவது பசுமைப் புரட்சியாகும்

3. பசுமைப் புரட்சி என்பது பச்சை நிறவர்ணத்தின் விற்பனையை அதிகரித்தல்

4. வீரிய வித்துக்கள் மூலம் விவசாய உற்பத்தியை பெருக்குதல்

இவற்றுள்

அ. 1 மற்றும் 2 சரி ஆ. 1 மற்றும் 3 சரி

இ. 1 மட்டும் சரி **ஈ. 4 மட்டும் சரி**

55. இந்திய விவசாயத்தில் கீழ்க்காண்ட பண்புகள் காணப்படுகின்றன?

1. மறைமுக வேலையின்மை



winmeen.com

2. அதிக விளைச்சல்

3. பெரு விவசாயிகள் அதிகம்

4. பருவகாற்றின் சூதாட்டம்

இவற்றுள்,

அ. 1 மற்றும் 2 மட்டும் ஆ. 2 மற்றும் 3 மட்டும்

இ. 2 மற்றும் 4 மட்டும் **ஈ. 1 மற்றும் 4 மட்டும்**

56. வங்கிகளின் வங்கியாக பணிபுரிவது எந்த வங்கி?

அ. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா **ஆ. ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா**

இ. யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா ஈ. செண்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா

57. இந்தியாவின் ஏழ்மையைப் போக்க சிறந்த வழி அல்லாதது எது?

அ. மக்கள் தொகையை கட்டுப்படுத்தல்

ஆ. மக்களுக்குத் தேவையான பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தல்

**இ. யாவருக்கும் சமமான வருமானம் அளித்தல்**

ஈ. தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துதல்

58. பணவீக்கம் என்பது

அ. மிக அதிக விலை

**ஆ. அதிகரித்துக் கொண்டிருக்கும் விலை**

இ. விலை வீழ்ச்சி

ஈ. மிகக்குறைந்த விலை

59. பட்டியல் 1 ஐ, பட்டியல் 2 உடன் பொருத்து, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. ராஜ்மன்னார் குழு | 1. தொழில் அனுமதி |
| ஆ. டட் குழு | 2. நேர்முக வரி |
| இ. வான்ச்சு குழு | 3. மத்திய மாநில பண உறவுகள் |
| ஈ. சக்கரவர்த்தி குழு | 4. பண பங்கீடு |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 1 | 2 | 4 |
| **ஆ.** | **2** | **3** | **1** | **4** |
| இ. | 1 | 4 | 3 | 2 |

ஈ. 4 2 1 3

60. இந்தியாவின் தொழிற்சாலைகள் நலிவடஒய முக்கியக் காரணம்

அ. கச்சாப் பொருள் பற்றாக்குறை ஆ. தொழிலாளர் பிரச்சனை

இ. போக்குவரத்து பிரச்சனை **ஈ. நிர்வாகக் குறைகள்**

61. மறைமுக வேலை வாய்ப்பின்மை என்பது எவ்வெப்பப் பகுதிகளில் காணப்படுகிறது?

1. விவசாயத்துறை
2. கிராமப்புறப் பகுதி
3. தொழிற்துறை
4. நகர்ப்புறங்களில்

சரியான விடையைத் தேர்ந்தெடு

**அ. 1மற்றும் 2 சரி** ஆ. 2 மற்றும் 4 சரி

இ. 3 மற்றும் 4 சரி ஈ. 1 மற்றும் 3 சரி

62. சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்பு இல்லாதது எது?

அ. O.E.C.D ஆ. O.P.E.C. **இ. G.D.P.** ஈ. E.E.C.

63. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் எவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது?

1. துவக்கப் பள்ளி கல்வியை பரவலாக்குதல்
2. விவசாயத்தின் வளர்ச்சிக்கும், விரிவு படுத்துதலுக்கும் முக்கியத்துவம்
3. மக்கள் தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தல்
4. பொதுத்துறை நிறுவனங்களை படிப்படியாக தனியார் வசமாக்கல்

சரியான விடையே தேர்ந்தெடு:

அ. 1, 2 மற்றும் 4 சரி **ஆ. 2,3 மற்றும் 4 சரி**

இ. 1,3 மற்றும் 4 சரி ஈ. 1,3 மற்றும் 4 சரி

64. பேச்சு வார்த்தையில் பங்கேற்ற நாடுகளின் எண்ணிக்கை

அ. 50 ஆ. 70 இ. 90 **ஈ. 110**

65. எந்த ஆண்டு SDR என்ற சர்வதேச இருப்பு IMF வினால் தோற்றுவிக்கப்பட்டது?

அ. 1969 **ஆ. 1970** இ. 1980 ஈ. 1985

66. இந்தியாவில் எந்த அமைப்பு முறைப்படுத்தப்படாத நிதி நிறுவனங்களை முறைப்படுத்தியது?

**அ. SEBI** ஆ. ICICI இ. GIC ஈ. IDBI

67. இந்திய அரசு எவ்வளவு சதவீதம் தனது மொத்த வருவாயில் கல்விக்கு செலவிடுகிறது?

**அ. 2%** ஆ. 5 % இ. 10% ஈ. 15%

68. எந்த வகையான திட்ட கட்டுப்பாடுகளை சுதந்திரமான அங்காடி நாடுகள் பின்பற்றுகிறது?

அ. நேரிடையான கட்டுப்பாடு ஆ. மறைமுக கட்டுப்பாடு

இ. குறிப்பிட்ட கட்டுப்பாடு **ஈ. இதர கட்டுப்பாடுகள்**

69. காசோலையின் மீதான பொதுக் கீறலைப் பற்றி எந்தச் சட்டப்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது?

அ. 126 **ஆ. 125** இ. 124 ஈ. 123

70. சாதக வணிக நிலை என்பது

அ. அதிகமான இறக்குமதி **ஆ. அதிகமான ஏற்றுமதி**

இ. சமநிலை இறக்குமதி ஏற்றுமதி ஈ. இவற்றுள் எதுவுமில்லை

71. 2001-02இல் இந்தியாவின் தலா வருமானம்

அ. ரூ. 16,500 **ஆ. ரூ. 16, 707** இ. ரூ. 17,500 ஈ. ரூ. 17,977

72. 200 2 இல் தமிழகத்தின் இறப்பு வீதம்

**அ. 44/ 10000** ஆ. 46/1000 இ. 47/1000 ஈ. 51/1000

73. தேசிய பங்கு மாற்றகம் எங்கு செயல்படுகிறது?

அ. டெல்லி **ஆ. மும்பை** இ. நாக்பூர் ஈ. கொல்கத்தா

74. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ. 1930 **ஆ. 1935** இ. 1949 ஈ. 1950

75. போக்குவரத்து, கல்வி, நலவாழ்வு, வீட்டு வசதி ஆகியவை எவ்வகை எனக் கருதப்படுகிறது?

**அ. சேவைகள்** ஆ. நில அமைப்பு

இ. கலாச்சாரம் ஈ. தொழில்கள்

76. கீழ்க்கண்டவற்றுள் வளர்விகித வரி எது?

**அ. வருமான வரி** ஆ. விற்பனை வரி

இ. கலால் வரி ஈ. சுங்க வரி

77. பட்டியல் 1 ஐ, பட்டியல் 2 உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. நம் நாட்டின் மைய வங்கி | 1. பேங்க் ஆப் மதுரா லிட் |
| ஆ. தொழில் நிதி நிறுவனங்களின் தலைமை வங்கி | 2. நபார்ட் (NABARD) |
| இ. வேளாண்மை வங்கிகளின் தலைமை நிறுவனம் | 3. ஐ.டி.பி.ஐ. (IDBI) |
| ஈ. தனியார் துறை வங்கி | 4. பாரத ரிசர்வ் வங்கி |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **3** | **2** | **1** |

ஆ. 1 2 3 4

இ. 2 1 4 3

ஈ. 4 3 1 2

78. எஸ்.ஈ.பி.ஐ (SEBI) என்பது

அ. நிதி நிறுவனம்

**ஆ. பங்கு அங்காடி கட்டுப்பாடு நிறுவனம்**

இ. மாநில ஏற்றுஅதி வங்கி

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

79. எந்தப் பொருளாதார வரையறையின் அடிப்படையில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் செயலாக்கப்பட்டது?

அ. லூயிசியின் வரையறை

ஆ. மகலோனொபிஸ் வரையறை

**இ. ஹராடு-டோமன் வரையறை**

ஈ. கினிஸியின் வரையறை

80. திட்டக்குழுவின் உபதலைவர் எந்த நிலையில் இருப்பார்?

அ. பிரதம மந்திரி

ஆ. திட்ட மந்திரி

**இ. காபினெட் மந்திரி அந்தஸ்த்தில் இருப்பார்**

ஈ. சிறந்த பொருளாதார நியுணர்

81. எந்த வித வாய்ப்பிற்காக கருவூல உண்டியல் முறைப் பயன்படுகிறது?

அ. மிகக் குறுகிய கால அரசு கடன்களுக்காக

**ஆ. குறுகிய கால அரசு கடன்களுக்காக**

இ. நடுத்தர அளவு அரசு கடன்களுக்காக

ஈ. வணிக அங்காடியில் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக

82. இந்திய தொழில் மற்றும் கடன் முதலீட்டுக் கழகம் ஊக்குவிக்கும் முறை

**அ. தனியார் துறை**

ஆ. பொதுத்துறை

இ. இணைத்துறை

ஈ. கூட்டுறவுத் துறை

83. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி கீழ்க்குறிப்பிட்ட வங்கியின் துணை நிறுவனமாகும்

அ. இந்திய ரிசர்வ் வங்கி

ஆ. பாரத ஸ்டேட் வங்கி

இ. தேசிய வேளாண்மை மற்றும் கிராமிய வளர்ச்சி வங்கி

**ஈ. இவற்றுள் எதுவுமில்லை**

84. இந்தியாவில் பின்பற்றப்படும் வங்கி வீதம்

**அ. கழிவு வீதம்**

ஆ. தண்டனை வீதம்

இ. வசதி வீதம்

ஈ. இவற்றில் எதுவும் இல்லை

85. சட்டமுறைக் கூட்டம் பொருந்தக் கூடிய நிறுமம்

அ. தனி நிறுமம் ஆ. அயல்நாட்டு நிறுமம்

**இ. பொது நிறுமம்** ஈ. சாசன நிறுமம்

86. எந்தவகை சிறுதொழில் அமைப்பில் அதிகப் பொருளாதார நடவடிக்கைத் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படுகிறது?

அ. உணவு பதப்படுத்தும் துறை

**ஆ. ஜவுளி/ துணிவகைகள் பதப்படுத்தும் முறை**

இ. உலோகப் பொருட்கள் பதப்படுத்தும் துறை

ஈ. பேப்பர் பதப்படுத்தும் உற்பத்தி துறை

87. மிகவும் அதிகமான தனிப்பட்ட திட்டம் அல்லாத செலவினைக் கூறுக.

அ. சமூக துறைகளுக்கான உதவித்தொகை(மானியம்)

ஆ. கல்விக்கான மானியம்

இ. அரசின் பொருளாதார முன்னேற்றத்தை சாராத செலவினங்கள்

**ஈ. வட்டி விகித அளவு மாறுதல்கள்**

88. எந்த ஆண்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அமுல்படுத்தப்பட்டது?

அ. 1976 ஆ. 1977 இ. 1978 **ஈ. 1980**

89. எந்த காரணத்திற்காக 1990-92 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் திட்டத்திற்கு விடுமுறை அளிக்கப்பட்டது?

அ. வளங்கள் பற்றாக்குறை

ஆ. வறட்சி நிலை

**இ. தகுந்த அரசியல் சூழல் இல்லாமை**

ஈ. பொருளாதார நடவடிக்கைகளில் பின்தங்கிய நிலை

90. மத்திய திட்டத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களில் மிகவும் முக்கியமானது யாது?

**அ. அங்காடி கடன்** ஆ. வெளிநாட்டு உதவி

இ. சிறுசேமிப்பு ஈ. வருங்கால வைப்புநிதி

91. ஒன்பதாவது நிதிக்குழு யார் தலைமையில் உருவாக்கப்பட்டது?

அ. ஒய்.பி. சவான் ஆ. ராஜா செல்லையா

இ. ஏ.எஸ்.குரேஷி **ஈ. என்.கே.பி. சால்வே**

92. நேரடி வரி என்பதன் பொருள் யாது?

அ. மத்திய அரசுக்கு செல்ல வேண்டிய வரி

ஆ. மாநில அரசுக்கு செல்ல வேண்டிய வரி

இ. உள்ளாட்சிகளுக்கு செல்ல வேண்டிய வரி

**ஈ. இதில் ஏதும் இல்லை**

93. VAT என்றால் என்ன?

**அ. மதிப்பு கூட்டப்பட்ட வரி** ஆ. வரிக்குப் பிறகு சரிபார்ப்பு

இ. மதிப்பு மற்றும் வரி ஈ. இவற்றில் எதுமில்லை

94. இந்திய ரிசர்வ் வங்கியின் கடன் கட்டுப்பாட்டின் முக்கிய நோக்கம்

அ. நிலையான விலை

ஆ. கடனைக் கட்டுப்படுத்துதல்

**இ. பணவீக்கம் மற்றும் விலைவசியைக் கட்டுப்படுத்துதல்**

ஈ. இவற்றில் எதுவுமில்லை

95. வணிக வங்கி, கிராமியக் கடனுக்கான நிதியை நேரடியாகவும் மற்றும் _____ மூலம் அளிக்கிறது.

அ. நபார்டு வங்கி **ஆ. கிராமிய வங்கிகள்**

இ. கூட்டுறவு வங்கிகள் ஈ. மாநில அரசு

96. பணத்தை பாதுகாப்பாகவும், சிக்கனமாகவும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பும் வழிமுறை

அ. பண ஆணை

ஆ. அஞ்சல் வழி அல்லது தந்தி வழி மாற்றம்

**இ. காசோலை முறை**

ஈ. இவற்றில் எதுவுமில்லை

97. வாராக்கடனுக்காக பெறக்கூடிய சொத்து என்றால் என்ன?

அ. நீதிமன்றத்தின் மூலம் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள்

**ஆ. வீணாகும் சொத்துக்கள்**

இ. இலாபகரமற்ற சொத்துக்கள்

ஈ. இவற்றில் எதுவுமில்லை

98. இந்தியாவில் எந்தத் துறையில் முதன் முதலில் ‘சுழல் திட்டம்’ தொடங்கப்பட்டது?

**அ. வேளாண்மைத்துறை** ஆ. தொழில் துறை

இ. வர்த்தக துறை ஈ. பாதுகாப்புத்துறை

99. மனித வளர்ச்சி குறியீடு எந்த ஆண்டில் ஐக்கிய நாட்டு சபையால் (HDI) உருவாக்கப்பட்டது?

**அ. 1990** ஆ. 1991 இ. 1996 ஈ. 1994

100. இந்தியாவில் வருவாய் ஏற்றத் தாழ்வினை குறைப்பதற்கு எந்த வழிமுறையினை மேற்கொள்ள வேண்டும்?

அ. பண்ணை வரி ஆ. செல்வ வரி

இ. மூலதன ஆதாய வரி **ஈ. சொத்தின் மேல் உச்சவரம்பு**

winmeen.com